# 14B செயல்முறைப் பகுதி

## 1. ஸமி தசி, ஜேர்மனி

ஸமி தசி கொசோவோ / கொசோவா விலிருந்து வருகிறார். அவர் வூப்பற்றாலில் வாழ்ந்துவருகிறார். 1987 தொடக்கம் பா.மொ.க அல்பானியன் ஆசிரியராக வூப்பற்றால், ரெம்ஷெல்ட் மற்றும் வேறு சமூகங்களில் பணியாற்றி வருகிறார். அவர் கூறியவற்றிலிருந்து சில பகுதிகள்:

ஜேர்மனியில், பா.மொ.க எல்லாக் கூட்டாட்சி மாநிலங்களிலும் ஒரே மாதிரியாக ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது. வட றைனே – வெஸ்ற்பாலின் (NRW) பிற கூட்டாட்சி மாநிலங்களிலிருந்து வேறுபடுகிறது. இங்கு பா.மொ.க பள்ளி மற்றும் மேலும் கல்வி அமைச்சினால் ஒழுங்கமைக்கப்பட்டது. எனினும் இங்குகூட பா.மொ.க வரவு தன்னிச்சையானது.

இளைய தொழில்சார்துறையினர் கற்பித்தல் நெறிமுறை மற்றும் கற்பித்தல் பற்றிய அறிவினைக் கையகப்படுத்தக் கூடிய பல்வகை வழங்கல்களை (கருத்தரங்குகள், செயற்பாட்டு வகுப்பு-உள் செயற்பாடுகள், முதலியன) தேசிய பள்ளிகளுக்கான நிறுவகம் ஏற்பாடு செய்துள்ளது.

நாம் கற்றபித்தலிற்கூட நன்றாகத் தொடருகிறோம் என்பதை உறுதிப்படுத்த, கற்பித்தல் ஒழுங்கமைப்பில் (எ.டு. கற்பித்தலுக்கான தராதர-அடிப்படை அணுகுமுறை பற்றியது) புதிய மேம்பாடுகளுடன் இணைந்த கூட்டங்கள் வேண்டும். இதற்கும் ஏனைய நெறிமுறைப் புதுமைகளுக்கு, கல்வி பொறுப்பாள்கைகள் வழக்கமாக ஒருநாள் தொழில்சார் மேம்பாட்டுச் செயற்பாடுகளை வழங்குவதுண்டு. அவை உண்மையில் நிறைய சேர்ப்பதால், நான் எப்போதுமே மகிழ்வுடன் சமுகமளிப்பேன். அத்துடன் இத்தகைய நிகழ்வுகளில் இடம்பெறும் பட்டறிவுகளின் பரிமாற்றம் பயனுள்ளதாகும்.

தொழில்சார்துறையை இன்னும் மேம்படுத்த வழங்கல் களையும் சோஎஸற் எனும் இடத்திலுள்ள தேசிய நிறுவகம் மேலும் வட றைனே – வெஸ்ற்பாலினில் உள்ள பல்வேறு நிறுவனங்கள் சார்ந்த சிறந்த வல்லுநர்கள் ஏற்பாடு செய்துள்ளனர். கூடுதலாக, பல்வகைக் கருப்பொருள்களுக்கு கருவிகளை வழங்கவும் பரிமாறவும் வாய்ப்புகள் நல்கும் பல்வேறு பணியவைகளும் உள்ளன.

கொசோவா, அல்பானியா, மசெடோனியா வில் ஒவ்வொரு கோடை காலத்திலும் கொசோவா கல்வி அமைச்சு ஒழுங்கு செய்யும் கருத்தரங்குகளும் தகவலுக்கான மிக இன்றியமையாத வளமாகும். இக்கருத்தரங்குகள் ஐரோப்பா முழுவதிலுமிருந்து அல்பானியன் பா.மொ.க வின் தொழிற்சார் தோழர்களிடையே இடம்பெறும் கருத்துப் பரிமாற்றத்திற்கு களமாக அமைகிறது.

## 2. யின்யிங் கொங், சுவிற்சர்லாந்து

யின்யிங் கொங் சீனாவைச் சேர்ந்தவர். அவர் மூன்று ஆண்டுகளாக சூரிச் மாநிலத்தில் வாழ்ந்து பணிசெய்து வருகிறார். அங்கு அவர் சீனமொழி பா.மொ.க ஆசிரியராகப் பணிசெய்கிறார். அவர் கூறியவற்றிலிருந்து சில பகுதிகள்:

சூரிச் பள்ளி ஒழுங்குக்கு அறிமுகம் என்னும் தொடர் கல்விக்கான கட்டாய நிகழ்ச்சி ஒன்று உள்ளது பற்றி நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நான் உண்மையில் இங்கு சூரிச் மாநிலக் கல்வி ஒழுங்கு பற்றி பெரிதும் கற்றுள்ளேன். இப்படிப்பட்ட ஒன்று சூரிச்சில் மாத்திரமல்லாது சுவிற்சர்லாந்தின் எல்லா இடங்களிலும் இருக்க வேண்டும்.

அதற்கு மேலாக, என்னைப் போன்றவர்களுக்கான, அதாவது, ஆசிரியக்கலை மற்றும் தனிப்பட்ட பாடப் பரப்புகளின் அடிப்படைகள் பற்றிய ஒரு கண்ணோட்டத்தை பெரிதும் விரும்புகிற பா.மொ.க ஆசிரியர்களுக்கான, ஆசிரியக் கலையில் தொடர் கல்வி வாய்ப்புகளை நான் நீண்ட காலமாக விரும்பியிருந்தேன்.

சுவிஸ் பள்ளி ஒழுங்குக் கட்டமைப்புக்குள் எங்களையும் ஒரு பொருட்டாய் பா.மொ.க ஆசிரியர்களாக எடுத்துக் கொள்ளப்பட்டமை நேர்மறையானதொன்றாகக் காண்கிறேன். என்னுடைய பிறந்த நாடு உண்மையில் எங்களுக்கு என்ன செய்தது என்று நான் அடிக்கடி கேட்பதுண்டு. எடுத்துக்காட்டாக, ஒரு கோடைகாலப் பள்ளியை அல்லது குறுங்கால தங்கல்களை சீனா வழங்கினால் நன்றாக இருக்குமல்லவா? இவ்வழியில், தங்கள் மொழித் திறன்களைப் பயிற்சி செய்து நாட்டையும் அதன் பண்பாட்டையும் தெரிந்துகொள்ளலாம் அதே நேரம், ஆசிரியர்களாகிய நாம் எங்கள் தொழில்துறை விற்பனத்தை அறியமுடியும்.

## 3. ரிசாஹ் செகுரி, சுவீடன்

ரிசாஹ் செகுரி கோசொவாவிலிருந்து வருகிறார். அவர் சுவீடனில் வாழ்கிறார். 1995 முதல் கரிஸ்க்ரோணாவில் அல்பானியன் பா.மொ.க வகுப்புகளில் கற்பித்துக் கொண்டிருக்கிறார். அவர் கூறியவற்றிலிருந்து சில பகுதிகள்:

ஒரு சிறந்த பாடசாலையானது தகுதியுள்ள, உயர் தொழில்சார், "கற்பித்தலின் மர்மம்" பின்பற்றும் கல்விமான்களை வேண்டி நிற்கின்றது. பல பள்ளி வலய பணிப்பாளர்கள் இதனை அங்கீகரித்துள்ளதோடு ஆசிரியர்களுக்கான தொழில்சார் விற்பன்னத்துவமாதலைப் பல்கலைக்கழகங்கள், ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளுடன் இணைந்து மிக்க வலுவுடன் பணியாற்றி வருகின்றனர். பா.மொ.க ஆசிரியராக நான் தொழில்சார் விற்பன்னத்துவ மேம்பெருக்க வாய்ப்புக்களின் நன்மைகளைப் பெறுகின்றேன். நான் எனது பல தொழில்சார் தோழர்களுடன் C, D மட்டங்களில் ஆசிரியக்கலை மற்றும் கற்பித்தல் பற்றிய உயர்பட்ட கற்கைநெறிகளுக்குச் சமுகமளித்துள்ளேன். எதிர்கால வகுப்பறையின் கற்பித்தல் மற்றும் மேம்பாட்டுக்கு வலுமிகுந்த பொறி போன்று சிறந்த தகுதி வாய்ந்த ஆசிரியர்களால் மாத்திரம் பள்ளியை இழுத்துச்செல்லலாம் என்பது இக்கற்கையின் வெற்றி என்பதனால் பெருமகிழ்ச்சியடைகின்றோம். எமது தொடர்ச்சியான கல்வி நிறைவடைந்ததொன்றல்ல மாறாக

உண்மையில் தொடர்ச்சியான கல்வியானது வாழ்நாட் செயற்பாடாக அமைதல் வேண்டும்.

மேலும், ஆசிரியர்களாக நாம் பாடத்திட்ட மேம்பாடு மற்றும் தொழில்சார் விற்பன்னத்துவ மேம்பாடு என்பவற்றில் ஈடுபவதால் எமக்கு பலவற்றைப் பகிரவும் ஒவ்வொருவரில் இருந்தும் மற்றவர் கற்கவும் முடிகிறது. நாம் ஒருவருக்கு ஒருவர் வளங்களாகவும் அகத்தூண்டுதலாகவும் அமைய நாம் எங்கள் பணியினை இணையிசைவாக மற்றும் விரிசன அடிப்படையில் கண்காணித்து மதிப்பிடுவோம். இவ்வாறான கல்லூரிசார் சமனானவர்களின் திறனாய்வு மற்றும் கலந்துரையாடல் வாய்ப்புக்களானவை அன்றாடப் பள்ளி வாழ்க்கையினுள் எளிதாகவும் சிறப்பாகவும் ஒருங்கிணைக்கக்கூடியதால் மிகவும் பெறுமதியானவையாகக் காணப்படுகின்றன.

## 4. ஹசிர் மெஹ்மெதி, ஒஸ்ரியா

ஹசிர் மெஹ்மெதி (M.A.) கொசொவா வைச் சேர்ந்தவர். 17 ஆண்டுகளாக வியென்னாவில் வாழ்கிறார். அங்கு 1999 முதல் பல்வேறு பள்ளிகளில் அல்பானியன் பா.மொ.க ஆசிரியராகப் பணி செய்துள்ளார்.

(…) பா.மொ.க வுக்கும் எனது ஒருங்கிணைந்த கற்பித்தலுக்கும் நன்மை பெற்று இருக்கவேண்டிய எந்தப் பட்டறிவையும் என் தாய் நாட்டில் நான் பெறவில்லை. அதனால் பா.மொ.க வில் வெற்றிதரும் கற்பித்தலுக்கும் கற்கைக்கும் அவசியமான திறன்களைப் பெற வழிகளைத் தேடவேண்டி ஏற்பட்டது. ஒருங்கிணைப்பில் உள்ள சவால்கள் தொடர்பான கருத்தரங்ககளில் நான் கலந்து கொண்டாலும் நான் கற்றவை போதுமானதாகக் காணப்படவில்லை. பா.மொ.க வின் சிறப்பு நிலைகளை எதிர்கொள்வதற்கு புதிய முறைகளை நானாகவே கண்டு பிடிக்க வேண்டியிருந்தது. ஒருங்கிணைவு சிக்கல்கள் மற்றும் தாய்மொழியுடன் தொடர்புகளை ஏற்படுத்த குறிப்பிட்ட பயிற்சிக்கான தேவைப்பாட்டினை நான் உணர்ந்துகொண்டேன். சமூக மற்றும் தொழிநுட்ப மேம்பாடுகள் மற்றும் போக்குகளின் மாற்றங்கள் போன்ற சிக்கல்களை எப்போதும் எழுப்புவதும் கலந்துரையாடுவதும் இத்தகைய கருத்தரங்குகளிலே காணப்படுவது இன்றிய மையாததாகும். பன்மொழிய, பல்பண்பாட்டு மற்றும் பல்பரிமாண பயிற்சிக்குழுக்களின் உருவாக்கமானது நவீன மேம்பாடுகள் மற்றும் உட்பார்வையுடன் அறிமுகமானவர் களாக மாற்றுமென்பதால் நான் வரவேற்கின்றேன்.

## 5. மஹமூத் அலி அதாம், சுவீடன்

மஹமூத் அலி அதாம் சோமாலியாவிலிருந்து வருகிறார். அங்கு அவர் ஒரு வரலாற்று ஆசிரியராகப் பணி செய்துள்ளார். வியென்னாவில் 17 ஆண்டுகள் வாழ்ந்தவர். 1999 முதல் பல்வேறு பள்ளிகளில் அல்பானியன் பா.மொ.க ஆசிரியராகப் பணி செய்துள்ளார்.

கல்வியைத் தொடர்வதற்காக, சிறந்த தாய்மொழி ஆசிரியராக எந்த அளவு விரைவாக மாற வேண்டுமோ அந்த அளவு விரைவாக தகைமையுள்ளவராக ஆகுதற்கான இயலுமையைப் பெற பல்வேறு விருப்புகள் என்னிடம் உள்ளன. ஆழமான பயிற்சி நெறிகள் சிறப்பாக அமையும். மொழியைக் கற்பிப்பதற்கான தகைமை மாத்திரமல்லாது வரலாற்றிலும் சமூகக்கல்வியிலும் தகைமையைப் பெறுவதே என் பெரு விருப்பமாகும்.

இதுவரை நான் பணிபுரியும் பள்ளிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒருநாள் பயிற்சி நிகழ்வுகளில் முதன்மையாகக் கலந்துகொண்டுள்ளேன். ஏனையவர் களுடனான தொடர்பு, நன்கு பட்டறிவு வாய்ந்த பா.மொ.க ஆசிரியர்களிடம் இருந்து நான் பெருமளவு கற்றேன். இவை யாவும் எனது தொடர் கல்விக்கு மிக இன்றியமையாதன.

சோமாலியாவிலும் சுவீடனிலும் பள்ளி ஒழுங்குகள் பெரிதும் வேறுபடுவதால், உள்ளூர் பள்ளி ஒழுங்குக்கு அறிமுகக் கற்கைநெறி மிகவும் இன்றியமையதாக அமையும். இது மற்றைப் பள்ளிகளுக்கு வருதல் மற்றைய வகுப்பறை ஆசிரியரிடம் வருதல் என்பவற்றுக்கும் இது பயன்படும்.

பா.மொ.க வுக்கான தேவைகளுக்குச் சிறப்பாக வடிவமைக் கப்பட்ட பள்ளி நூல்களை அல்லது கருவிகளை வழங்கி எனது எனது தாய்நாடானது எனது பணிக்கு துணை புரியுமானால் சிறப்பாக அமையும். வாய்ப்பில்லாமையினால், அவ்வாறான பாட நூல்கள் முழுமையாகப் பற்றாக் குறையாகக் காணப்படுகின்றன.

## 6. ஸ்வெற்லானா மடிக், ஒஸ்ரியா

ஸ்வெற்லானா மடிக் சேர்பியாவைச் சேர்ந்தவர் வியென்னாவில் வாழ்கிறார். அவர் 20 ஆண்டுகள் பொஸ்னியன் / குரோசியன் / சேர்பியன் பா.மொ.க ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். பல நூல்களுக்கு அவர் ஆசிரியராவார்.

பா.மொ.க ஆசிரியருக்கு தொழில்சார் விற்பன்ன மேம்பாடு மற்றும் தொடர் கல்வி என்பன சிறப்பு வாய்ந்தனவாகும், குறிப்பாக கல்விப் பணிகள் மற்றும் பணிக்கூற்று என்பவற்றின் புத்துருவாக்க நடைமுறைப்படுத்தல் தொடர்பாக. இதுவரை வழங்கப்பட்ட கருத்தரங்குகளிலும் மற்றும் எடுத்துரைப்புகளிலும், கற்பித்தல் பயிற்சியினை விட கல்விசார் கோட்பாடுகளிலேயே அதிகளவு வலியுறுத்தல் காணப்பட்டது. எதிர்காலத்தில் ஆசிரியர்களின் உருப்படியான வேண்டுகைகளுடனான கூடிய மீள் திசைப்படுத்தல் வேண்டப்படுகின்றது என நான் நம்புகிறேன். இப்பரப்பில் கூடிய அறிவியல் ஆய்வின் ஊடாக இது அடையப்படலாம். அவ்வாறு செய்கையில், தற்போதைய மற்றும் நடைமுறைப் பண்புகள்சார் கல்வி மற்றும் வகுப்பறையில் கற்பிப்பது உள்ளடக்கப்பட்டுக் குறிப்பிடுவதும் இன்றியமையாததாகும்.

ஒஸ்ரியா பா.மொ.க வுக்கு சிறப்பு முன்னுரிமை வழங்கும் மற்றும் மிகவும் பொறுப்பு வாய்ந்த கல்வி சார் கொள்கைகளை வெளிக்கொணரும் சில நாடுகளில் ஒன்றாகும். பள்ளிப் பொறுப்பாள்கைகளே தொடக்கத் திலிருந்து பா.மொ.க வுக்கான பொறுப்புடையனவாக இருந்தன. 1992 ஆம் ஆண்டு முதல் ஒஸ்ரியன் பாடசாலை முறைமையின் பகுதியாக பா.மொ.க செயற்பட்டு வருகின்றது. இந்நிலையில், பொஸ்னியன், குரோஷியன் மற்றும் சேர்பியன் தொடர்பாக, பிறப்பு நாடுகள் கற்பித்தல் கட்டமைப்பில் செல்வாக்குச் செலுத்தும் வாயப்பு இனி இல்லாமலாயிற்று. எவ்வாறாயினும் முன்னைய யுகொஸ்லாவியாவைச் சேர்ந்த பெருந்தொகை மக்கள் இன்று ஒஸ்ரியாவில் வாழ்ந்து வருகின்றனர் என்பதனால் இவ்வாறான நாடுகள் பா.மொ.க வில் பேரார்வத்தினை வெளிப்படுத்துவார்கள் என்பது எதிர்பார்க்கப்படும்.

ஆசிரியக்கலை மற்றும் கற்பித்தல் பரப்பில் ஆசிரிய மேம்பாடும் தொடர் கல்வியும் எந்தவொரு புதிய சமூகத்துக்கும் இன்றியமையாததொன்றாகும். இந்த உணர்வில் நான் எப்பொழுதும் என்முன்னுள்ள வேண்டுகைகள் மற்றும் பணிகளை நிறைவேற்ற

முயற்சித்து வருகின்றேன். இக் காரணத்தால், நான் ஒழுங்கான முறையில் கருத்தரங்குகளிலும் அறிவியல் மாநாடுகளிலும் கலந்துகொளகிறேன். மேலும் எனது அன்றாடக் கற்பித்தலில் புதிய அறிவை உட்புகுத்துவதில் நான் முனைப்புடன் செயற்படுகின்றேன். எனது சொந்த வெளியீட்டினூடாக ஏனையவர்களுக்கு பயன்பெறும் பாங்கிலும் அவைகிடைக்கப் பெறக்கூடிய பாங்கிலும் எனது பட்டறிவுகளைத் திரட்டித்தர முயற்சிப்பதோடு அதே மனப்பாங்குடன் வியென்னிஸ் அரச பாடசாலைகளில் பா.மொ.க என்பது பற்றிய முனைவர் பட்டத்துக்காக ஆய்வுசெய்து வருகிறேன்.

---

## 7. குல்டெரன் ஒஸ்யில்டைரிம், இங்கிலாந்து

குல்டெரன் ஒஸ்யில்டைரிம் துருக்கியைச் சேர்ந்தவர். அவள் லண்டனில் வாழ்கிறாள், அங்கு அவர் பல ஆண்டுகளாக துருக்கிமொழி பா.மொ.க ஆசிரியராகப் பணிசெய்கிறார்.

எனது கல்வித்தகைமைக்கு அமைய நான் துருக்கியில் ஆசிரியராக டிப்ளோமா பட்டத்தை பெற்றிருக்கின்றேன். மேலும் நான் எப்பொழுதும் இங்கிலாந்தில் வளர்கின்ற அல்லது சிறு பராயத்தில் இங்கு வந்த மாணவர்களுக்கு துருக்கிஷ் மொழியைக் கற்பிப்பது தொடர்பில் கற்பித்தல் பற்றி நான் அறிந்துவருகிறேன். எனது தொடர் கல்விக்கு நானே உருவாக்கிய கற்பித்தல்சார் கருவிகள் துணைநின்றுள்ளன. (எடுத்துக்காட்டாக, துருக்கி மொழியின் எழுத்துக்களை கற்க துணைநிற்கும் பொருட்கள் மற்றும் காட்சிப்படுத்தல் கருவிகள், நினைவு அட்டைகள் போன்றன) கற்பித்தல் கருவிகளைக் கொள்முதல் செய்தல் பெரும்பாலும் மிகக் கடினமாயுள்ளது. எனினும் சில நூல் விறபனை நிலையங்களில் சிறிய தெரிவுகளையே மேற்கொள்ளமுடியும். எனினும் அவை தொடக்க நிலையில் உள்ளவர்களுக்காக அமைக்கப்பட்டவையாயுள்ளன. துருக்கி கல்வி அமைச்சானது இது தொடர்பில் ஏதுாவது செய்யலாம்.